# ஒரே மாதத்தில் மெட்ரோ ரயிலில் 18 லட்சம் பொதுமக்கள் பயணம்

## முக கவசம் அணியாதவர்களுக்கு அபராதம்

சென்னை, ஆக. 2–

சென்னை மெட்ரோ ரயில்களில் கடந்த மாதம் மட்டும் 18 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ நிறுவனம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை:

கொரோனா தொற்று பரவல் காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொது முடக்கத்தில், தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததை தொடர்ந்து சென்னை மெட்ரோ ரயில் சேவைகள் கடந்த ஜுன் 21ம் தேதி முதல் 50 சதவீத இருக்கை வசதிகளுடன் மீண்டும் தொடங்கியது. அன்று முதல் வருகின்ற ஜுலை 30ம் தேதி வரை மொத்தம் 22,02,045 பயணிகள் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர். ஜுலை மாதத்தில் மட்டும் 1ம் தேதி முதல் 31ம் தேதி வரை மொத்தம் 18 லட்சத்து 46 ஆயிரத்து 466 பயணிகள் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர் அதிகபட்சமாக கடந்த மாதம் 26ம் தேதி அன்று 74,380 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

மெட்ரோ ரயில் நிலையத்துக்கு முக கவசம் அணியாமல் வருகின்றவர்களுக்கு ரூ.200 அபராதம் வசூலிக்கப்படுகிறது. கடந்த ஜுன் 21ம் தேதி முதல் ஜுலை 31ம் தேதி வரை முக கவசம் அணியாமல் பயணம் செய்ததற்காக 102 பயணிகளிடம் இருந்து ரூ.20,400 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.